சுற்றறிக்கை இலக்கம் :- PRE/2024/39

எனது இலக்கம் :- TR/PRE/CIR/2024

**TR - 04**

மிக முக்கியம்

தேர்தல் ஆணைக்குழு,
சரண மாவத்தை,
இராஜகிரிய.
2024.08.18 :

**அனைத்து மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும்,**
**பிரதி / உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கும்**

**சனாதிபதித் தேர்தல்கள் - 2024.09.21**
**தபால் மற்றும் பொலிஸ் திணைக்களங்களுக்கு வாகனங்களைப் பெற்றுக் கொடுத்தல்**

மேற்குறித்த தேர்தல் தொடர்பான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளின் விநியோகத்திற்காக தபால் திணைக்களத்திடம் போதியளவு வாகனங்கள் இல்லாதிருப்பதன் காரணமாக, குறித்த நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு அரச வாகனங்களைப் பெற்றுத் தருமாறு உங்களிடம் அவர்கள் கோரிக்கை விடுத்தால், உங்கள் மாவட்டத்திலிருந்து ஒரு சில அரச வாகனங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தயவுடன் தெரிவிக்கின்றேன். அவ்வாறு வழங்கப்படும் **வாகனங்களுக்கான எரிபொருள் செலவுகள் தபால் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படல் வேண்டும். அத்துடன் அவ்வாகனங்களின் சாரதிகளுக்கான மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் இணைந்த படி போன்ற கொடுப்பனவுகள் மாவட்டத் தேர்தல் அலுவலகங்களால் மேற்கொள்ளப்பட வேண்டும்.** தபால் திணைக்களத்தினால் நிறைவேற்றப்படுகின்ற குறித்த தேர்தல் நடவடிக்கைகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் எதிர்வரும் தினங்களில் அவர்களுக்காக ஒதுக்கித் தரப்படும்.

02. இத்தேர்தலுக்கான பாதுகாப்புக் கடமைகளை நிறைவேற்றுவதற்காக பொலிஸ் திணைக்களத்திற்கும் போதியளவு வாகனங்கள் அவசியமாக இருப்பதனால், அவர்களும் அரச வாகனங்களைப் பெற்றுக் கொள்வதற்காக தெரிவத்தாட்சி அலுவலர்களிடம் கோரிக்கை விடுக்கக்கூடும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் உங்களது மாவட்டத்தில் தேர்தல் நடவடிக்கைகளுக்காக போதியளவு வாகனங்கள் இருந்தால் மாத்திரம் ஒரு சில அரச வாகனங்களை பொலிஸ் திணைக்களத்திற்கு வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். அவ்வாறு பெற்றுக் கொடுக்கப்படும் வாகனங்களை தேர்தல் முடிவடைந்து 03 தினங்களுக்குள் மீளக் கையளித்தல் வேண்டுமென அவர்களை அறிவுறுத்துதல் வேண்டும். அவ்வாறு வழங்கப்படும் **வாகனங்களுக்கான எரிபொருள் செலவுகள் பொலிஸ் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படல் வேண்டும். அத்துடன் அவ்வாகனங்களின் சாரதிகளுக்கான மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் இணைந்த படி போன்ற கொடுப்பனவுகள் மாவட்டத் தேர்தல் அலுவலகங்களால் மேற்கொள்ளப்பட வேண்டும்.**

03. இது தவிர, பொலிஸ் திணைக்களத்திற்குத் தேவையான வாகனங்கள் பொலிஸ் மா அதிபரின் அனுமதியுடன், வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கு சுற்றறிக்கையின் (சுற்றறிக்கை இலக்கம் PRE/2024/40 ஐப் பார்க்கவும்.) குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் கட்டளைகளுக்கமைய அவர்களுக்கு தனிப்பட்ட வாகனங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

04. **தேர்தலின் போது பொலிஸ் திணைக்களத்தின் தேவைப்பாடுகளுக்காகப் பெற்றுக் கொள்ளப்படுகின்ற தனியார் வாகனங்களை ஓட்டத்திற்கு விடுவதற்கு முன்னர் அவற்றை அந்தந்த மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளல் வேண்டுமென்பதுடன், பொலிஸ் திணைக்களத்தின் தேவைகளுக்கேற்ற வகையில் தகுதியான வாகனங்களைத் தேர்ந்தெடுத்தலும் வேண்டும்.**

தேர்தல் முடிவடைந்த பின்னர் பொலிஸ் திணைக்களத்தினால் பதிவு செய்யப்பட்ட வாகனங்களின் தகவல்கள் அடங்கிய அறிக்கையொன்று மாவட்டத் தேர்தல் அலுவலகத்தினூடாக தேர்தல் செயலகத்தின் உதவித் தேர்தல்கள் ஆணையாளர் (நிருவாகம்) அவர்களுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். பொலிஸ் திணைக்களத்திற்கான நிதி ஒதுக்கீடுகளை மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் குறித்த அறிக்கையின் பிரகாரம் மேற்கொள்ளப்படுமென்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

05. இலங்கை இராணுவத்தினரால் ஏதேனும் கடமைக்காக அழைப்பு விடுக்கும் சந்தர்ப்பத்தில், அவ்வாறான நடவடிக்கைகள் பொலிஸ் திணைக்களத்திற்கு ஒத்துழைப்பு வழங்கும் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றமையால், இராணுவத்தினரின் தேவைப்பாடுகளுக்காக வழங்கப்படும் வாகனங்களுக்கான அனைத்து கொடுப்பனவுகளும் பொலிஸ் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**சமன் ஸ்ரீ ரத்நாயக்க,**
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்,
(தேர்தல் ஆணைக்குழு சார்பாக)

**பிரதிகள் :-**

01. கணக்காய்வாளர் நாயகம் - தயவன்புடன் தகவலுக்காக
02. தபால் மாஅதிபர், தபால் தலைமையகம் } அனைத்து பிரதேச தபாலதிபர்பள் அறிந்து கொள்வதற்கும், உரிய அலுவலர்களை அறிவுறுத்துவதற்காகவும்
03. சிரேட்ட பிரதி பொலிஸ் மா அதிபர், நிருவாக மற்றும் மத்திய மாகாணம் பொலிஸ் தலைமையகம் } அறிந்து கொள்வதற்கும், உரிய அலுவலர்களை அறிவுறுத்துவதற்காகவும்
04. சிரேட்ட பிரதி பொலிஸ் மா அதிபர், (சமூக பொலிஸ், சுற்றுலா, முதலீடு மற்றும் தேர்தல்கள்)
05. இராணுவத் தளபதி, இராணுவத் தலைமையகம். } அறிந்து கொள்வதற்கும், உரிய அலுவலர்களை அறிவுறுத்துவதற்காகவும்
06. செயலாளர், தேர்தல் ஆணைக்குழு – தயவன்புடன் தகவலுக்காக.
07. மேலதிகத் தேர்தல்கள் ஆணையாளர் (தேசியத் தேர்தல்கள்/ நிருவாகம்) தயவன்புடன் தகவலுக்காக.
08. தலைமை நிதி அலுவலர். தலைமை உள்ளகக் கணக்காய்வாளர். } - தயவன்புடன் தகவலுக்காகவும் தேவையான அலுவல்களுக்காகவும்